( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**


# முன்னோடிப் பரீட்சை - இல-01

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ..........................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**




(01) இவ்வுருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே,

(1) A , F (2) C , B (3) F , D

(02) இவ்வுருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே,

(1) E , D (2) F , C (3) B , E

(03) பின்வரும் கவிதையில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமானச் சொற்கள் முறையே இடம்பெறும் விடை,


வெண்டி .................. யோடு ஈர
வெண்காயம் பூசனிக்காய்கள்
கொண்டு .................. தோட்டம் - பயன்
கொடுக்கும் எங்கள் ....................

(1) அரிசி - அழகான - உடல்
(2) தென்னை - வீட்டு - உணவு
(3) கத்திரி - வளரும் - தோட்டம்

(04) பின்வரும் வாக்கியத்தில் உள்ள இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்சோடி யாது?


எமது உடலைப் பாதுகாக்கவும் எமக்கு வரும் .................... எதிர்க்கவும் நாம் ...................... உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

(1) பிரச்சினைகளை, நிறைய (2) நோய்களை, சத்துள்ள (3) தொற்றுக்களை, ஊன்

(05) 


உருவில் காட்டப்பட்டுள்ள வட்ட வடிவக் கடதாசியானது முதலில் முறிந்த கோட்டின் வழியே இரண்டாக மடிக்கப்பட்டது. அதன்பின் இரு கடதாசிகளையும் சேர்த்துப் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டிய பின் கிடைக்கும் கடதாசித் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 3


(06) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் சதுரங்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 3 (3) 4

(07) 1999 ஆம் ஆண்டு உரித்துடையது,

(1) 21 ஆம் நூற்றாண்டின் 9 ஆம் தசாப்தத்திற்கு
(2) 20 ஆம் நூற்றாண்டின் 9 ஆம் தசாப்தத்திற்கு
(3) 20 ஆம் நூற்றாண்டின் 10 ஆம் தசாப்தத்திற்கு

(08) 


இவ்வுரு வரையப்பட்டுள்ள முறை,

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது

(09)

| | | | | |
|---|---|---|---|---|
| T | H | R | E | E |
| W | K | T | B | S |
| O | N | E | M | I |
| N | I | N | E | X |

தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் உருவில் நிலைக்குத்தாக அல்லது கிடையாக 1 தொடக்கம் 9 வரையான சில இலக்கங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6


kalvi.lk

(10) ஒரு குறித்த மாதத்தின் முதலாம் நாள் செவ்வாய்க்கிழமையாகும். கடைசி நாள் புதன்கிழமையாகும். அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,

(1) பெப்ரவரி (2) ஏப்ரல் (3) ஜுலை

(11) சிவாவிடம் 7 நாணயத் தாள்கள் உள்ளன. அவற்றின் பெறுமானங்கள் ரூபாய் 100.00 , ரூபாய் 500.00 , ரூபாய் 1000.00 ஆகும். ரூபாய் 100.00 நாணயத் தாள்களின் எண்ணிக்கையும், ரூபாய் 500.00 நாணயத் தாள்களின் எண்ணிக்கையும் சமன். அதன்படி, சிவாவிடம் இருக்கக்கூடிய அதிகபட்ச பணத் தொகை,

(1) ரூபாய் 2800.00 (2) ரூபாய் 7000.00 (3) ரூபாய் 5600.00



(12) 


உருவில் ஒரு வட்ட வடிவக் கடதாசி ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. பொது எல்லையின் இரு பக்கங்களிலும் இருக்கும் பகுதிகளில் ஒரே இலக்கம் அமையாதவாறு இந்த ஆறு பகுதிகளிலும் எழுதக்கூடிய குறைந்தபட்ச இலக்கங்களின் எண்ணிக்கை,


(1) 4 (2) 5 (3) 6

(13) ஒரு நிரையில் அனிலிற்கும் ஆசிமிற்கும் இடையே 9 பிள்ளைகளும், ஆசிமிற்கும் குமாருக்கும் இடையே 3 பிள்ளைகளும் நிற்கின்றனர். அதன்படி, அனிலிற்கும் குமாருக்கும் இடையே நிற்கக்கூடிய பிள்ளைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,




(1) 13 (2) 5 (3) 4


(14)  எனின், ..........?..........  வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருத் தொகுதி,

(1)  (2)  (3) 

(15) 



வட்ட வடிவக் கடதாசியொன்றை இரு தடவைகள் மடித்து 2 துளைகள் இடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அக்கடதாசித் துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் முறை,

(1)  (2)  (3) 




(16) 

இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் ஒன்றன் மீது ஒன்று அமைந்தது எத்தனை நிமிடங்களுக்கு முன்பாகும்?

(1) 30 நிமிடங்களுக்கு முன் (2) 40 நிமிடங்களுக்கு முன் (3) 50 நிமிடங்களுக்கு முன்

(17) 


வாளியொன்று சதுரமுகியொன்றின் மீது வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. வாளியையும் சதுரமுகியையும் அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(18) முகம் பார்க்கும் கண்ணாடியொன்றினால் பார்க்கும்போது அதே வடிவில் புலப்படும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட கார்ட்போர்ட் அட்டைகளைத் தெரிவு செய்க.

(1) A S T (2) M V N (3) H O W

(19) வட்டம், எல்லா பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோணி, சதுரம், செவ்வகம் ஆகிய வடிவங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.



A B C D

அருகே ஒவ்வொரு வடிவத்திற்கும் வரையக்கூடிய சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) C , A , D , B (2) D , B , C , A (3) B , D , A , C

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(20) ரவியின் உண்டியலில் ரூபாய் 1.00 , ரூபாய் 2.00 , ரூபாய் 5.00 ஆகிய நாணயக் குற்றிகள் இருந்தன. அதில் உள்ள மொத்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை 24 ஆகும். ஒவ்வொரு நாணய வகையிலும் உள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமனாகும். அதன்படி, உண்டியலிலுள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி,

(1) ரூபாய் 64.00 (2) ரூபாய் 96.00 (3) ரூபாய் 58.00

(21) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின்,

(1) அரைவாசியை விட கூடியது (2) அரைவாசியை விட குறைவு (3) அரைப் பங்கு

(22) ஒரு பிள்ளை ஒரு மாம்பழத்தை ஆறு நிமிடங்களில் சாப்பிடும். நான்கு பிள்ளைகள் ஒரே நேரத்தில் நான்கு மாம்பழங்களை சாப்பிட ஆரம்பித்தால், அவர்கள் எவ்வளவு நேரத்தில் மாம்பழங்களை சாப்பிடுவார்கள்?


(1) 16 நிமிடங்களில் (2) 6 நிமிடங்களில் (3) 24 நிமிடங்களில்

(23) **569** **548** **596** **584** **504** 5 எண்கள் எழுதப்பட்டுள்ள 5 கார்ட்போர்ட் அட்டைகள் இங்கு காட்டப்பட்டுள்ளது. இவற்றை இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்துவதற்குச் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 3

(24) வருடமொன்றின் முதல் மூன்று மாதங்களினதும் நாட்களின் கூட்டுத்தொகை 91 ஆகும். அதன்படி, அவ்வருடமாக இருக்கக்கூடியது,

(1) 2022 (2) 2020 (3) 2018

(25) 


மாபிள்களைப் பயன்படுத்தி 4 சந்தர்ப்பங்களில் செய்த நான்கு கோலங்கள் உருக்களில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, 6 ஆவது கோலத்தைச் செய்வதற்குத் தேவைப்படும் மாபிள்களின் எண்ணிக்கை,

(1) 36 (2) 25 (3) 34

(26) பெட்டியொன்றில் ஒரே அளவான 12 கனவுருக்களை வைக்கலாம். அல்லது ஒரே அளவான 36 சதுரமுகிகளை வைக்கலாம். அப்பெட்டியினுள் 6 கனவுருக்கள் வைக்கப்பட்டுள்ளன. அதன்படி, அப்பெட்டியில் மீதியாக உள்ள இடத்தில் எத்தனை சதுரமுகிகளை வைக்கலாம்?

(1) 24 (2) 20 (3) 18

(27)  .................. இவ்வுருக் கோலத்தில் 29 உருக்கள் உள்ளன. அதன்படி, இவ்வுருக் கோலத்திலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை,

(1) 12 (2) 10 (3) 16

(28) நாளொன்றில் கடிகாரத்தின் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் சுழலும் தடவைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 14 (2) 18 (3) 26

(29) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க,

பாலைப்போல நிலவு வானில்
பவனிவரப் போகுது
கோலக் கடல் அலைக் கை தட்டி
குதூகலிக்கப் போகுது

இங்கு பாலுக்கு ஒப்பமாகக் கூறப்படுவது எது?



(1) நிலவு (2) வானம் (3) கடல்

(30) பண்டிகைக் காலத்தில் வியாபாரிகள் பொருட்களின் விலைகளை உயர்த்துகின்றனர். வியாபாரிகளின் இந்த நடவடிக்கைக்குப் மிகப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.

(1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு (2) எரிகிற வீட்டிற் பிடுங்கினது இலாபம்

(3) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

(31) கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக் கோலங்களுக்குள் ஓர் உருக் கோலத்தில் ஓர் உரு ஏனையவற்றை விட வித்தியாசமானது. இவ்வாறு வித்தியாசமான உருவைக் கொண்ட உருக் கோலத்தைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

kalvi.lk

(32) சித்ரா சுற்றாடல் பாடத்தில் மாதாந்தப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு,

| ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|
| 25 | 30 | 40 | ............... | 75 | 100 |

இதன்படி, ஏப்ரல் மாதம் அவள் பெற்ற புள்ளிகள்,

(1) 55 (2) 60 (3) 50

(33) இரண்டு பேர் படம் பார்க்கச் சென்றார்கள். ஒருவர் மற்றவரின் அண்ணா ஆவார். மற்றவர் அண்ணாவின் தம்பியல்ல. அவ்வாறாயின் மற்றவருக்கும் அவருக்கும் உள்ள உறவு,

(1) அக்கா (2) தங்கை (3) அண்ணா

(34) ஒரு தட்டில் நான்கு இதழ்கள், ஐந்து இதழ்களைக் கொண்ட 8 பூக்கள் இருந்தன. பூக்களின் மொத்த இதழ்களின் எண்ணிக்கை 35 எனின், தட்டில் ஐந்து இதழ்களைக் கொண்ட பூக்கள் எத்தனை இருந்தன?


(1) 4 (2) 5 (3) 3

(35) **குளிர் என்பதற்கு நீர் போல , ..................... என்பதற்கு தீ ஆகும்.**

மேலே உள்ள வாக்கியத்தின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்,

(1) சூரியன் (2) வெப்பம் (3) புகை


(36) தாயக்கட்டையொன்றின் மூன்று பக்கங்களின் தோற்றங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.



இத்தாயக்கட்டையில் [E] இம்முகத்திற்கு எதிர்முகமாக இருப்பது,

(1) [N] (2) [H] (3) [L]

(37) அடைப்புகளுக்குள் உள்ள இரு உருக்களை ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் எண்,



(1) 698 (2) 986 (3) 869

(38) I தொடக்கம் X வரையுள்ள உரோம எண்குறிகளை ஒரே சம நீளத்திலான கம்பித் துண்டுகளினால் அமைப்பதற்குத் தேவைப்படும் மொத்த கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 28 (2) 30 (3) 26

(39)

| | | | |
|---|---|---|---|
| **முதலாம் நிரை** → | S | E | T |
| **இரண்டாம் நிரை** → | T | E | N |
| **மூன்றாம் நிரை** → | E | A | T |

அருகே காட்டப்பட்டுள்ள அட்டவணையை நன்கு பரிசீலித்துப் பார்க்குக.

**படிமுறை 1 :-** இரண்டாம் நிரையையும் மூன்றாம் நிரையையும் ஒன்றையொன்று இடம் மாற்றுக.

**படிமுறை 2 :-** முதலாம் நிரையையும் இரண்டாம் நிரையையும் ஒன்றையொன்று இடம் மாற்றுக.

முதலாம் இரண்டாம் படிமுறைகளின்படி, நிரைகளை இடம் மாற்றிய பின் அட்டவணை காணக்கிடைக்கும் முறை,

(1)

| | | |
|---|---|---|
| T | E | N |
| E | A | T |
| S | E | T |

(2)

| | | |
|---|---|---|
| E | A | T |
| S | E | T |
| T | E | N |

(3)

| | | |
|---|---|---|
| T | E | N |
| S | E | T |
| E | A | T |

(40) வைத்தியரினால் நோயாளி ஒருவருக்கு 54 மருந்து வில்லைகள் வழங்கப்பட்டன. அதன்படி, அம்மருந்து வில்லைகளை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக வைத்தியர் வழங்கிய ஆலோசனை,

(1) 2 மருந்து வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் 11 நாட்களுக்கு எடுக்கவும்.

(2) 3 மருந்து வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு நான்கு தடவைகள் 4 நாட்களுக்கு எடுக்கவும்.

(3) 3 மருந்து வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் 6 நாட்களுக்கு எடுக்கவும்.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-01

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

எமது நாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவாகும். இதன் அமைவிடம் கடற்போக்குவரத்துக்கும், மீன்பிடித் தொழிலுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்திருப்பதால் ஆரம்ப காலங்களில் கடற்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இன்றும் கடல் மார்க்கமாக ஒவ்வொரு நாட்டிற்கும் இடையில் பல்வேறு பொருள் விநியோகங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறு பாரிய கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படும் பொருட்கள் துறைமுகங்களில் இறக்கப்படுவதும், அதேபோல் பொருட்கள் ஏற்றப்படுவதும் நடைபெறுகின்றன. இலங்கையில் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களும் இவ்வாறு பொருட்களை ஏற்றி இறக்கும் துறைமுகங்களாக காணப்படுகின்றன.

(i) இலங்கை எதனால் சூழப்பட்டுள்ளது? ..............................................................

(ii) இலங்கையின் அமைவிடம் எவற்றிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? ..............................................................

(iii) இலங்கை எந்த சமுத்திரத்தில் அமைந்துள்ளது? ..............................................................

(iv) கப்பல்களில் இருந்து பொருட்களை இறக்கி ஏற்றப்படும் இடத்தின் பெயர் என்ன? ..............................................................

(v) இலங்கையில் அமைந்துள்ள துறைமுகங்களின் பெயர்களை எழுதுக. ..............................................................

(vi) பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்க்கருத்துச் சொற்சோடியைத் தெரிவுசெய்து எழுதுக. ..............................................................

**(02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பயனிலையை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) நானும் நண்பனும் நூலகத்திற்குச் .............................. ( செல்வேன் / செல்வோம் )

(ii) நீ காலை உணவு .............................. ( உண்டாய் / உண்டீர்கள் )

(iii) பண்டைய காலத்தில் எருதுகளும், மாடுகளும் நிலத்தை .............................. ( உழுதது / உழுதன )

(iv) நான் நண்பனின் வீட்டிற்குச் .............................. ( சென்றேன் / சென்றான் )

**(03) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) அம்மா சமைப்பதற்கு கறியினுள் .............................. ( புலி / புளி ) யை இட்டார்.

(ii) அவர்கள் .............................. ( பணி / பனி ) யை ஒழுங்காகச் செய்தனர்.

(iii) தூய ஆடைகள் .............................. ( அனிந்து / அணிந்து ) பாடசாலைக்கு வர வேண்டும்.

**(04) பின்வரும் சொற்களின் திருத்தமான வடிவங்களை எழுதுக.**

(i) நாப்பது :- ..............................  (ii) முயச்சி :- ..............................

**(05) "பச்சைக் கிளி பழுத்த பழங்களை கொத்தித் தின்றது." இவ்வாக்கியத்திலுள்ள,**

(i) செயப்படுபொருள் அடைமொழியை இனங்கண்டு எழுதுக. ..............................

(ii) பயனிலை அடைமொழியை இனங்கண்டு எழுதுக. ..............................

(iii) எழுவாய் அடைமொழியை இனங்கண்டு எழுதுக. ..............................

**(06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியை கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

| ஆற அமர, | உயர்வு தாழ்வு, | நகமும் சதையும் |
|---|---|---|

(i) அவர்கள் .............................. நட்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

(ii) கமலா வீட்டு வேலைகளை .............................. செய்து முடித்தாள்.

(iii) அனைவரின் வாழ்க்கையிலும் .............................. ஏற்படும்.

kalvi.lk

**(07) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளம் இடுக.**

**(i)** "அவர்கள்" உயர்திணை படர்க்கை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். ( )

**(ii)** "நாங்கள்" உயர்திணை முன்னிலை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். ( )

**(iii)** "நீ" உயர்திணை முன்னிலை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். ( )

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**(i)** தன்னைப் பற்றித் தானே எழுதும் சரிதை :-........................................ **(ii)** தேர்தலில் போட்டியிடுபவர் :-..............................

**(09) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள நிறுத்தக்குறிகளின் பெயர்களை எழுதுக.**

"சீனி, பருப்பு, அரிசி, மா கொண்டு வந்தாயா?" என அம்மா அண்ணனிடம் கேட்டார்.

**(i)** ............................ **(ii)** ................................ **(iii)** ............................ **(iv)** ..............................

**(10) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

**(i)** many / are / How / there? / dogs :-. ............................................ **(ii)** a / It / nose / small / has :- ...............................

**(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

**(i)** Open your book. :- ................................................ **(ii)** Where do you live? :- ................................................

**(12) பின்வரும் உருவின்படி, கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்தினதும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**



**(i)** The ball is ............................ ( under / on / near ) the table.

**(ii)** The box is ............................ ( in / on / under ) the table.

**(iii)** The chair is ............................ ( near / on / under ) the table.

**(13) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**


**(i)** යහළුවා :- ........................................ **(ii)** රෝහල :-................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

உங்கள் பெயர் என்ன? ..................................................................

Education

(15) **(i)**




"நான்காயிரத்து நூற்றி ஒன்று" என்பதை இவ்வெண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

**(ii)** "7909" இற்கு பின்னுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக. ........................................

(16)



மேலே சில ஒரேயளவான சதுர வடிவக் கார்ட்போர்ட் அட்டைகளும், ஒரேயளவான செவ்வக வடிவக் கார்ட்போர்ட் அட்டைகளும் உள்ளன. அக்கார்ட்போர்ட் அட்டைகளைப் பயன்படுத்தி சதுரமுகி ஒன்றை அமைத்துக்கொண்டதன் பின் எஞ்சியிருக்கும் கார்ட்போர்ட் அட்டைகளின் எண்ணிக்கை யாது? ..............................................................


(17)




இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு 20 நிமிடங்களில் பின்னரான நேரத்தை எழுதுக. ............................................................................................

(18) II, IV, VI, VIII, ......................... இந்த உரோம எண்குறிகள் எழுதப்பட்டுள்ள எண் கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை வெற்றிடத்திலேயே எழுதுக.

(19)



**உரு A** **உரு B**

உரு **A** இல் சதுரமொன்றும், உரு **B** இல் செவ்வகமொன்றும் காட்டப்பட்டுள்ளன. உரு **A,** உரு **B** ஆகிய உருக்களிலுள்ள சமச்சீர் அச்சுகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகை யாது? ..................

(20)

| | | | |
|---|---|---|---|
| 20 | 38 | 12 | 28 |
| 40 | 26 | 17 | |


இக்கூட்டினுள் உள்ள இலக்கங்களில் நான்கின் மடங்குகளைத் தெரிவுசெய்து எழுதுக.

..........................................................................................

(21) கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரை ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதினால் சரிநடுவில் வரும் எண்ணை எழுதுக.

7805, 7890, 7098, 7980, 7280 :- ..........................................................

(22)




இவ்வுருவின் $\frac{3}{4}$ ஐ நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய சிறிய சதுரங்களின் எண்ணிக்கை யாது? ..................................................................

(23) சிவா இரண்டு அன்னாசிப்பழங்களைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 500.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தபோது, வியாபாரி ரூபாய் 200.00 ஐ மீதிப் பணமாக சிவாவிற்கு கொடுத்தார். அதன்படி, அன்னாசிப்பழம் ஒன்றின் விலை யாது? ..........................................

kalvi.lk

(24) 4m நீளமுள்ள கம்பியொன்றிலிருந்து 70 cm நீளமுள்ள எத்தனை கம்பித் துண்டுகளை வெட்டலாம்? ..............................

(25)




சுட்டெண்:-..........................................

இவ்வுருவின்படி, கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவினதும் வெற்றிடங்களை நிரப்புக.


(i) ........................................ இருப்பது வாளிக்கு ........................................ திசையிலாகும்.

(ii) ........................................ இருப்பது ........................................ தெற்குத் திசையிலாகும்.

(26) (i) 1l 500ml தேனை 200ml கொள்ளும் எத்தனை சிறிய போத்தல்களுக்கு ஊற்ற முடியும்? ........................................

(ii) சிறிய போத்தல்களில் தேனை ஊற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் தேனின் அளவு யாது? ........................................

(27) இறாக்கை ஒன்றில் ஒவ்வொரு வகையிலும் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைப் பின்வரும் வரைபு காட்டுகிறது. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.




(i) இறாக்கையிலுள்ள சமயப் புத்தகங்களின் எண்ணிக்கை, இறாக்கையிலுள்ள சுற்றாடல் புத்தகங்களின் எண்ணிக்கையை விட 4 அதிகமாகும். அதனை வரைபில் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.

(ii) இறாக்கையிலுள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?........................

(28)

| 8 | 1 | 6 | 3 |
|---|---|---|---|

இங்கு காட்டப்பட்டுள்ள 4 கார்ட்போர்ட் அட்டைகளையும் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுத்தில் எழுதுக. ..............................

(29) பாடசாலை ஒன்றிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 843 ஆகும். இப்பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை, இப்பாடசாலையில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையை விட 112 அதிகமாகும். அதன்படி, இப்பாடசாலையில் உள்ள மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ........................................


- **இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) நன்னடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குச் செல்ல வேண்டியது,
(1) பிறப்பு, இறப்பு, திருமண பதிவு அலுவலகத்துக்கு (2) கிராம சேவகர் அலுவலகத்துக்கு
(3) தபால் அலுவலகத்துக்கு

(31) கொல்லர் பட்டறையில் நெருப்பு எரிவதற்கான காற்றை வழங்குவதற்குப் பயன்படுத்தும் உபகரணம்,
(1) துருத்தி (2) மணியாசு (3) தீதாள்

(32) இலங்கையில் உள்ள நிலப்பரப்பில் கூடிய மாகாணம்,
(1) மத்திய மாகாணம் (2) மேல் மாகாணம் (3) வடமத்திய மாகாணம்

(33)



A B C

A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ள மின்குமிழ்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,
(1) A - திரண்ட இழை மின்குமிழ், B - CFL மின்குமிழ், C - LED மின்குமிழ்
(2) A - CFL மின்குமிழ், B - LED மின்குமிழ், C - திரண்ட இழை மின்குமிழ்
(3) A - LED மின்குமிழ், B - CFL மின்குமிழ், C - திரண்ட இழை மின்குமிழ்

(34) ஆதிகால மனிதன் தொடர்பாடலை மேற்கொண்ட முறைகள்,
(1) முரசறைதல் மூலம், கூக்குரலிடல் மூலம் (2) பத்திரிகை மூலம், தொலைபேசி மூலம்
(3) கடிதம் மூலம், தொலைக்காட்சி மூலம்

(35) உயரமான மரக்கிளைகளில் கூடு கட்டும் பறவை,
(1) குயில் (2) மரங்கொத்தி (3) கழுகு

(36) மண்ணரிப்பைத் தடுக்கக்கூடிய வழிமுறை,
(1) மலைச்சாய்வுகளில் உள்ள மரங்களை வெட்டுவதனால் (2) மலைச்சாய்வுகளுக்குக் குறுக்காக கற்களை அடுக்குவதனால்
(3) மலைச்சாய்வுகளில் மேலிருந்து கீழாக வாய்க்கால்களை வெட்டுவதனால்

(37) ஒரு குறிப்பிட்ட காலத்தில் பூக்கள் பூக்கும் தாவர வகைகள் **அல்லாதது**,
(1) றம்புட்டான், மரமுந்திரிகை (2) இறப்பர், முள்முருங்கை (3) செவ்வரத்தை, தாமரை

(38) கீழே தரப்பட்டுள்ள பூக்கள் தொடர்பான கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) இரவில் மலரும் பூக்கள் வெள்ளை நிறமுடையதாகும். (2) இரவில் மலரும் பூக்கள் மணமுடையதாகும்.
(3) இரவில் மலரும் பூக்கள் ஐந்து இதழ்களை மட்டும் உடையவை.

(39) மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) கரைவலை, அத்தாங்கு, கரப்பு (2) வனைச்சில்லு, தீதாள், அரம் (3) மணியாசு, அரிவாள், கலப்பை

(40) தேசிய கீதத்தைப் பாட வேண்டியது,
(1) தேசியக் கொடியை ஏற்ற முன் (2) தேசியக் கொடியை ஏற்றிய பின் (3) தேசியக் கொடியை ஏற்றும்போது

(41) 8 கால்களைக் கொண்ட பிராணிகள்,
(1) இறால், நண்டு (2) பூரான், மரவட்டை (3) தேள், உண்ணி

kalvi.lk

(42) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) குடம்பி → முட்டை → கூட்டுப்புழு → நிறையுடலி (2) முட்டை → குடம்பி → கூட்டுப்புழு → நிறையுடலி
(3) கூட்டுப்புழு → நிறையுடலி → முட்டை → குடம்பி

(43) தரமான பொருட்களுக்கு வழங்கப்படும் சர்வதேச தர இலச்சினை,
(1) ISO (2) SLS (3) SMS

(44) புளிப்புச் சுவையுடைய பழங்களில் காணப்படும் விற்றமின் வகை,
(1) விற்றமின் B (2) விற்றமின் A (3) விற்றமின் C

(45) உணவு நஞ்சாகக்கூடிய சந்தர்ப்பம் **அல்லாதது**,
(1) மூடி வைத்து சமைக்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கை உட்கொள்ளல்.
(2) கரட், போஞ்சி போன்ற உணவுகளைப் பச்சையாக உட்கொள்ளல். (3) போமலின் இடப்பட்ட மீனை உட்கொள்ளல்.

(46) சிவப்பு, கறுப்பு நிறங்களை ஒன்றுடன் ஒன்று கலப்பதனால் கிடைக்கும் நிறம்,
(1) கபிலம் (2) ஊதா (3) செம்மஞ்சள்

(47) வீதியில் நடந்துச் செல்லும்போது நாம் பேண வேண்டிய நற்பழக்கம்,
(1) வீதியின் இடதுப் பக்க ஓரத்தில் செல்லுதல். (2) வீதியில் குழுவாக செல்லுதல்.
(3) வீதியை கடப்பதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் விரைவாக வீதியைக் கடத்தல்.

(48) சிவப்புச் சிலுவை அடையாளம் காணப்படும் வாகனம்,
(1) நோயாளர்காவு வண்டி (2) புகையிரதம் (3) விமானம்

(49) வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு இடுவதற்கு மிகப் பொருத்தமான பசளை,
(1) இரசாயனப் பசளை (2) சேதனப் பசளை (கூட்டெரு) (3) மேலே இரு விடைகளும் பிழையானது

(50) சட்டக்காந்தமொன்றின் வடமுனை, தென்முனை என்பவற்றைக் குறிக்கும் நிறங்கள் முறையே,
(1) சிவப்பு, நீலம் (2) நீலம், சிவப்பு (3) பச்சை, நீலம்

(51) இலங்கையின் மிகப் பெரிய நீர் மின்நிலையம் அமைந்துள்ள நீர்த்தேக்கம்,
(1) சேனாநாயக்க சமுத்திரம் (2) கலா வாவி (3) விக்டோரியா

(52) இலங்கைத் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) இலங்கை ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும்.
(2) இலங்கை இந்தியாவிற்கு வடக்கே அமைந்துள்ளது. (3) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவாகும்.

(53) கதிர்காம நகரை ஊடறுத்துச் செல்லும் பிரசித்தமான நதி,
(1) மாணிக்க கங்கை (2) மகாவலி கங்கை (3) களனி கங்கை

(54) 
இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள கிராமிய விளையாட்டு,
(1) கபடி (2) கிளித்தட்டு (3) போர்த்தேங்காய்

(55) காதுகளினால் மாத்திரம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரு தொடர்பாடல் ஊடகங்கள்,
(1) தொலைக்காட்சி, செய்தித்தாள் (2) வானொலி, ஒலிபெருக்கி (3) சுவரொட்டி, வானொலி

(56) இஸ்லாமியர், இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் கொண்டாடும் சமயப் பண்டிகைகளை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) தீபாவளி, ஹஜ்ஜுப் பெருநாள், நத்தார், வெசாக் (2) ஹஜ்ஜுப் பெருநாள், நத்தார், தீபாவளி, வெசாக்
(3) ஹஜ்ஜுப் பெருநாள், தீபாவளி, வெசாக், நத்தார்

(57) கூட்டாக வேலை செய்யும்போது கிடைக்கும் அனுகூலங்களில் ஒன்று,
(1) ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு ஏற்படும். (2) ஒற்றுமை ஏற்படும். (3) நேரத்தை விரயமாக்கும்.

(58) தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்பமுடியும் எனவும் அச்செய்மதிகளைப் பயன்படுத்தி செய்திப் பறிமாற்ற முறையொன்றை உருவாக்க முடியும் எனவும் முதன் முதலில் கூறிய விஞ்ஞானி யார்?
(1) ஆதர். சி. கிளாக் (2) கலாநிதி சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா (3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

(59) உணவு உண்ணல் தொடர்பான நற்பழக்கங்களுள் **அடங்காத** விடயம்,
(1) வாயிலிருந்து சத்தம் வராமல் உணவை உட்கொள்ளுதல்.
(2) உணவு உண்ணும்போது மேசையின் கீழ் உள்ள பிராணிகளுக்கு உணவு வழங்குதல்.
(3) போதுமான அளவு உணவை மட்டும் பகிர்ந்துக் கொள்ளுதல்

**(60) "என் பிறந்தநாள் அன்றைக்கு அப்பா பரிசளித்த துவிச்சக்கரவண்டியினால் நான் அடைந்த பயன்கள் பல" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

1. ..................................................................................................................

2. ..................................................................................................................

3. ..................................................................................................................

kalvi.lk